பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 09 புதன்கிழமை 23.03.2022 கதிர் 138

**இது ரகசியம் அல்ல!**

இந்தியக் கடன் உதவித் திட்டம் கிடைத்திருக்கின்றது. அதன் கீழான அத்தியாவசிய பொருள் விநியோகத்திட்டத்தை 'பஸில் அண்ட் கோ' எப்படிக் கையாளும், அதன் மூலம் கணிசமாக உழைத்து, அந்த மூலதனத்தைப் பயன்படுத்தி, ☞ 2

# பயங்கரவாதத் திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றம்



பயங்கரவாதத் தடுப்புத் (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பயங்கரவாதத் தடுப்புத் (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆரம்பித்துவைத்துஉரையாற்றினார்.

இதன்போது பழைய சட்டத்துக்கும், புதிய சட்டமூலத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை விவரித்தார். அத்துடன் இது இறுதி வடிவம் அல்ல, ஆரம்பக்கட்ட திருத்தங்கள் மாத்திரமே, எதிர்காலத்தில் மேலும் திருத்தங்கள் முன்வைக்கப் படலாம் என்று வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்பின்னர் ஆளும் மற்றும் எதிரணி ☞ 2

# வடக்கிலிருந்து ஒரே நாளில் 16 பேர் தமிழகத்தில் தஞ்சம்

## கடும் பொருளாதார நெருக்கடியால்







(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கிலிருந்து ஒரே நாளில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் தப்பிச் சென்று தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மன்னாரிலிருந்து 3 படகுகளில் தமிழகம் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஒரு படகில் புறப்பட்ட 6 பேர் நேற்றுக் காலையும், நேற்றுப் பகல் இரு படகுகளில் புறப்பட்ட மேலும் 10 பேர் மாலையும் சென்றடைந்துள்ளனர். ☞ 2

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் எந்த மாற்றங்களையும் காணோம்

## முழுமையாக நீக்கக்கோரும் போராட்டம் தொடரும் என்று சுமந்திரன் தெரிவிப்பு



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் உள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்பது மிகவும் அச்சுறுத்தலான விடயம். இப்போதும் இந்தச் சட்டத்தில் இதே நிலைமையே காணப்படுகின்றது. 'திருத்தம்' என்ற பெயரில் இந்தச் சட்டத்தில் எந்த மாற்றங்களையும் அரசு செய்யவில்லை. இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் எனக் ☞ 2

# அமெ. தூதுக்குழு இலங்கை வருகை



அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நுலண்ட் உட்பட ஐந்து பேர் கொண்ட தூதுக் குழுவினர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று ☞ 2

# மூத்த அரசியல் தலைவர் கிருஷ்ணராஜா மறைவு!

## சிறிதரன் எம்.பி. இரங்கல்



யாழ்ப்பாணத்தின் மூளாய் மண்ணைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி – திருவையாற்றை வதிவிடமாகவும் கொண்ட இ.கிருஷ்ணராஜா ஐயா நேற்று அமரத்துவம் அடைந்த செய்தி மிகுந்த மனவருத்தமளிக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி ☞ 9

# எம்.சி.சி. உடன்படிக்கையைச் செயற்படுத்தவே அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கை வருகை

## பின்னணியில் பஸில் என விமல் பகிரங்கக் குற்றச்சாட்டு

எம்.சி.சி. உடன்படிக்கையை செயற்படுத்திக்கொள்வதற்காகவே அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கை வந்துள்ளனர். இதன் பின்னணியில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ செயற்படுகின்றார்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற அரசியல் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் ☞ 2

# கோட்டையில் கண்காட்சி



(இ.கலையமுதன்)

தொல்லியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் ஏற்பாட்டில் மரபுரிமைச் சின்னங்களைக் காட்சிப்படுத்தி ஆவணப்படுத்தும் கண்காட்சி ☞ 9

# வடக்கு கல்வி அமைச்சை முற்றுகையிட்டு தொண்டர் ஆசிரியர்கள் நேற்று போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் வாயிலில் வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று கதவடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களது நியமனம் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் அமைச்சுக்கு வருகை தந்திருந்த ☞ 9

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உள்ளூராட்சித் தேர்தலை மொட்டுக் கட்சிக்கு சார்பாக அரங்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றெல்லாம் இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் எதிர்வு கூறியிருந்தேன். வாசகர்களுக்கு அது நினைவில் இருக்கலாம்.

அதனை உறுதிப்படுத்துமாற் போல நேற்று நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா.

“இந்தியாவிடம் இருந்து கிடைத்த பில்லியன் டொலர் கடனுதவி மூலம், அந்த நாட்டிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் பொருள்களை நாட்டில் உள்ள பதினான்காயிரம் கிராமங்களிலும், பதினான்காயிரம் மொட்டு உறுப்பினர்கள் மூலம், ‘மொட்டுக் கடை’கள் அமைத்து, அவற்றின் வாயிலாக ‘கூப்பன்’ அடிப்படையில் விநியோகிக்கவும் அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிகின்றது. கிராமத்துக்கு ஒரு மொட்டு உறுப்பினருக்கு இந்த உரிமை – இந்திய கடனுதவி மூலம் கிடைக்கும் அத்தியாவசியப் பொருள்களை கூப்பன் அடிப்படையில் விநியோகிக்கும் வாய்ப்பு – வழங்கப்பட்ட இருப்பதாகத் தெரிகின்றது.” – என்ற சாரப்பட தகவல் வெளியிட்டிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – கிராமம் தோறும் ஒரு ‘மொட்டுக்கடை’ முதலாளியை உருவாக்கும் உத்தேசம்.

அடுத்தது – மீண்டும் மிலேனியத்துக்கு முந்திய கூப்பன் யுகத்துக்குள் நாம் பிரவேசிக்கப் போகின்றோம் என்பது.

பழைய கியூ யுகம் வந்து விட்டது. அதன் ஓர் அங்கமான ‘கூப்பன்’ அதைத் தொடர்ந்து வருகின்றது. அவ்வளவுதான்.

★ ★ ★

பயங்கவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தங்கள் மீதான நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தில் அருமையான உரை ஒன்றை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆற்றினார். அவரது சட்டத்துறை. அதுவும் அவருக்கு நன்கு பரிச்சயமான பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விடயம். பிய்த்து உதறினார். எந்தக் குறுக்கீடும் இன்றி சபை சிலைபோல செவிமடுத்தது.

இப்பத்தியில் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டிய இரண்டு விடயங்களை அவர் தொட்டுச் சென்றார்.

ஒருவிடயம் – இந்தச் சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு மேல் சிறையில் வாடிய ஒரு தம்பதியினரின் அவல நிலைமை பற்றியது. அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். பராமரிக்க ஆள்கள் இல்லை.

பாபு என்ற விடுதலைப் புலிக்கு உணவளித்து விருந்தோம்பிய குற்றச்சாட்டு. அவர்களின் ஒப்பம் பலவந்தமாக – அச்சுறுத்தி – பெறப்பட்டு, அதன் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கைதான பாபு, சித்திரவதை செய்தும் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்பமிடாதமையால் விடுதலையாகியிருந்தார். இந்தத் தம்பதியினரால் விருந்தோம்பி உபசரிக்கப்பட்ட பாபு விடுதலையாகி, நிரபராதியாகி, வழக்கு விசாரணையைப் பார்க்க வந்திருந்தார். அவருக்குத் தேநீர் வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் தடுப்புக்காவலில் இரண்டு வருடங்களுக்கு மேல் தொடர்ந்தும் அந்தத் தம்பதியர் வாடுவதை சுமந்திரன் மன்றில் சுட்டிக்காட்டினார். இதுதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற கொடுங்கோல் சட்டத்தின் மகாத்மியம் என்பதைத் தெளிவுபடுத்தினார் சுமந்திரன்.

அடுத்த விடயம் – பத்திரிகையாளர் திஸநாயத்துக்கு எதிராக அந்தச் சட்டம் எவ்வளவு கொடூரமாக – குரூரமாக – பாய்ந்தது என்பதை சுமந்திரன் விவரித்தார். அதை நினைத்த போது எனக்கும் கூட குலை நடுங்கியது.

திஸநாயகம் பெற்ற அதே அனுபவங்களை நானும் பெற்றேன். அனுபவித்தேன். முன்னர் திஸநாயகம் தமது பத்திரிகையில் எழுதியவற்றுடன் ஒப்பிட்டால் நான் எழுதியவை பல ஆயிரம் மடங்குகள் அதிகம். அவருக்கு பயங்கவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் இருபது ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அவரை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டிய கட்டாயம் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது. விடுதலையான கையோடே திஸநாயகத்தை அமெரிக்க தேசம் தனது கவனிப்பில் எடுத்து, உடனடியாக அமெரிக்காவுக்கு அழைத்து, அங்கு அரசியல் புகலிடமும் அளித்து விட்டது.

அதேசமயம் அதிர்ஷ்டம் என் பக்கம் இருந்தது போலும். விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதலுக்கு உதவியது, புலிகளின் தளபதிகளுடன் தொடர்புகளைப் பேணியது போன்ற – எனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட – குற்றச்சாட்டுகளில் சட்ட முகாந்திரம் ஏதும் இல்லாத காரணத்தால் மூன்று மாதங்களில் நான் நிரபராதி என விடுவிக்கப்பட்டேன்.

நான் முதலில் கடத்தப்பட்ட சமயம், அதையடுத்து சில மணி நேரங்களில் ஆஸ்திரேலிய தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த இலங்கையின் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரும், இப்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில் புலிகள் நடத்திய விமானத் தாக்குதல்களுக்கு நானே பொறுப்பென்றும், கொழும்பில் பல பொதுமக்களின் உயிர்களைக் காவு கொண்ட இரத்தக் கறை படிந்த குற்றவாளி நான் என்றும் குற்றம் சுமத்தி சத்தமிட்டிருந்தார்.

அடிப்படை ஏதுமற்ற அந்தக் குற்றச் சாட்டுகள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவுமில்லை, நிரூபிக்கப்படவுமில்லை. என்னிடமிருந்து பலவந்தமாக எந்த ஒப்பமும் அவர்களால் பெறப்படவுமில்லை. ஆகையால் திஸநாயகத்துக்கு நேர்ந்த கதி எனக்கு ஏற்படவுடமில்லை.

நீதிமன்றங்களில் என் விடுவிப்புக்காக இன்றைய ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கே.வி.தவராஜா ஆகியோர் முன்னிலையாகி வாதிட்டனர். அமரர் கௌரி சங்கரி தவராஜா அது தொடர்பான சட்டப் பத்திரங்கள், மனுக்கள், வழக்குப் பிரதிகள் போன்றவற்றை செவ்வனே தயாரித்து உதவினார்.

திஸநாயகத்துக்கு எதிரான குற்றச் சாட்டுகளுடன் ஒப்பிடுகையில் எனக்கு எதிராகப் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ சுமத்திய குற்றச்சாட்டுகள் மிக மோசமானவை. “அவர் பத்திரிகையாளர் அல்லர்; பயங்கரவாதி. நான் பொறுப்புடன் கூறுகிறேன். அவர் இரத்தக் கறை படிந்த ஒரு பயங்கரவாதி” – என்று தொலைக்காட்சிப் பேட்டியில் சீற்றத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ சத்தமிட்டு திட்டித் தீர்த்த பின்னரும், அதே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிடியிலிருந்து நான் தப்பி வந்திருக்கிறேன் என்றால் அது தெய்வ அனுக்கிரகம்தான்.

திஸநாயகம் குறித்து நேற்று சுமந்திரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையை செவிமடுத்த போது என் மனதில் ஓடிய எண்ணம் இதுதான்.

அந்தச் சமயத்தில் உலகளாவிய ரீதியில் – புலம்பெயர் தேசங்களிலும் – என் விடுதலை வேண்டி கூட்டு மதப் பிரார்த்தனை வைபவங்கள் வெள்ளி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து நடைபெற்றன என அறிந்தேன். அவற்றின் வலிமையை இப்போது உணரக் கூடியதாக இருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

– மின்னல் –

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரும் எமது போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:–

தற்காலிக ஏற்பாடு எனக் கூறி கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 43 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. எனவே, ஆறு மாத கால தற்காலிக ஏற்பாடுகள் என்பது ஒரு நகைப்புக்குரிய விடயம் . அதேபோல் இது அரசமைப்பு ரீதியான சட்டம் என ரணில் விக்கிரமசிங்க கூறினார். ஆனால், இது அரசமைப்பு ரீதியானது அல்ல. அரசமைப்புக்கு முரணாகவே இது கொண்டு வரப்பட்டது.

அவசர சட்டமூலமாகக் கொண்டுவந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இதனை நிறைவேற்றினர். இதற்கு நீதிமன்றத்தின் ஆணை வழங்க முன்னரே சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டனர். அரசமைப்புக்கு முரணாகக் கொண்டு வந்த ஒரு சட்டத்தை அடுத்து வந்த அரசுகள் கருத்தில்கொள்ளாது நடைமுறைப் படுத்தின .

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட அன்றிலிருந்து அது துஷ்பிரயோகம் செய்யப்பட்டே வருகின்றது. பயங்கரவாதத்தை இது தடுக்கவில்லை. இது குறித்து பல சாட்சியங்கள் உள்ளன. நானும் சில வழக்குகளில் ஆஜராகி யுள்ளேன். குறிப்பாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இதில் அச்சுறுத்தலான விடயமாக உள்ளது. வற்புறுத்தப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுகின்றது. இப்போதும் இதே நிலைமையே காணப்படுகின்றது. இவற்றில் எந்த மாற்றங்களையும் அரசு செய்யவில்லை.

தடுப்புக்காவல் காலத்தை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாகக் குறைத்ததாகக் கூறப்படுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. 18 மாதங்களுக்குப் பின்னர் எவராவது விடுவிக்கப்பட்டுள்ளனரா? அல்லது 12 மாதங்களுக்கு பின்னரும் யாரும் விடுவிக்கப்படுவார்களா? பிணை வழங்கப்படும் என்றாலும் கூட மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கினாலும் மேல் நீதிமன்றம் அதனை நிராகரித்து விசார ணைகளை முடிவும் வரையில் நபரைத் தடுத்து வைக்க முடியும்.

எனவே, இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக நாம் நாடு முழுவதும் சென்று ஒரு பிரசாரத்தை முன்னெடுத்துள்ளோம். சகல இன மக்களையும் சந்தித்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்ற தெளிவுபடுத்தலை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்தச் சட்டத்தின் கீழ் 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜே.வி.பியினர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது முஸ்லிம் சமூகமும் பாதிக்கப்பட்டு வருகின்றது. எனவேதான் சகல மக்களும் இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றீர்கள். தவறான ஒரு முயற்சியை ஆரம்பித்து அது நல்ல நகர்வு எனவும், அதற்கான ஆரம்பத்தைக் கையாண்டுள்ளோம் எனவும், இதனைத் தொடர்வோம் எனவும் கூறுகின்றீர்கள். அதேபோல் உலகத்தை ஏமாற்ற நினைக்கின்றீர்கள். இதில் மறுசீரமைப்பு என்ற சொல்லுக்கான அர்த்தத்தையே மாற்றியுள்ளீர்கள். ஆகவே, இந்தச் சட்ட திருத்தத்தை முழுமையாக நாம் எதிர்க்கின்றோம்.

இதேவேளை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் எனக் கோரும் எமது போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் – என்றார்.

## வடக்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதல் 6 பேரும் தனுஷ்கோடிக்கு அடுத்த மூன்றாம் மணல் திடலில் தரை இறங்கியுள்ளனர்.

ஏனைய 10 பேரும் இராமேஸ்வரம் – அரிச்சல் முனையிலுள்ள நான்காம் மணல் திடலில் தரை இறங்கியுள்ளனர்.

இவ்வாறு சென்ற 16 பேரில் 3 ஆண்கள், 5 பெண்கள் மற்றும் 8 சிறுவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்க முடியாமல் இவர்கள் தமிழகத்துக்குத் தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

## அமெ.தூதுக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்தத் தூதுக்குழுவினர் நேற்று மாலை நாட்டை வந்தடைந்தனர்.

இவர்கள் இங்கு முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளனர்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர்களால் சட்டமூலம் தொடர்பில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

விவாதத்தின்முடிவில் சட்டமூலம் மீது வாக்கெடுப்பை அநுரகுமார திஸாநாயக்க கோரினார். இதன்படி இரண்டாம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது ஆதரவாக 86 பேரும், எதிராக 35 பேரும் வாக்களித்தனர்.

அதன்பின்னர் குழுநிலை விவாதத்தின்போது வெளிவிவகார அமைச்சரால் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு, சட்டமூலம் திருத்தப்பட்டது .இறுதியில் சட்டமூலம் திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது என பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டிய அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்துக்கு சபாநாயகர் சான்றுரை வழங்கிய பின்னர், சட்டம் அமுலுக்கு வரும்.

## எம்.சி.சி. உடன்படிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நல்லாட்சியின்போது எம்.சி.சி. உடன்படிக்கையைச் செயற்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சித்தது. அதற்கு நாம் இடமளிக்கவில்லை. இந்நிலையில், புதிய கோணத்தில் அந்த உடன்படிக்கையைச் செயற்படுத்தும் நோக்கிலேயே அமெரிக்க இராஜதந்திரிகள் இங்கு வருகின்றனர்.

இலங்கை பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்தால் திட்டத்தை இலகுவில் நிறைவேற்றிவிடலாம் என்பதால்தான், அதற்கான சூழ்நிலையை நிதி அமைச்சர் ஏற்படுத்திக்கொடுக்கின்றார்.

தேசப்பற்றாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சியை ‘அசிங்கமான’ அமெரிக்கர் சீரழிக்கின்றனர் – என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery -
அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு
வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## 'டோண்ட் வொறி; பி ஹப்பி!'

இலங்கையில் ஒவ்வொரு சாமனியனினதும் வீட்டிலும் பிரச்சினை. நெருக்கடி. எப்படிக் குடும்ப வாழ்வைக் கொண்டு நடத்துவது என்பது தெரியாமல் பதற்றம்; குழப்பம்.

நாட்டின் சரித்திரத்தில் முன்பின் இல்லாத வகையில் நாடு பெரும் பொருளாதார சுழலில் சிக்குண்டுள்ளது. நாட்டு மக்களின் வாழ்க்கை – அன்றாட ஜீவியம் – மோசமாகப் பாதிக்கப்படப் போகின்றது. தோற்றுப் போன நாட்டில் சீரழிந்த பிரஜைகள் என்ற நிலைமைதான் எஞ்சும்.

இந்த நிலையில் உலக நாடுகளில் மக்களின் மகிழ்ச்சி நிலைமை தொடர்பான அறிக்கையை ஐ.நா. வெளியிட்டிருக்கின்றது.

மகிழ்ச்சி என்பது மக்களின் மனதின் உள்ளார்ந்த கருத்தியல் உணர்வு. ஐ.நா. போன்றவை வெளிக் கணக்கீடுகள், மாதிப்பீடுகள் மூலம் அதனை எவ்வாறு அளவீடு செய்தன என்பது புரியக் கூடியதாக இல்லை.

யாழ்ப்பாணம் வந்த இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யுத்தம் நடைபெற்ற முப்பது ஆண்டுகள் வடக்கின் இருண்ட காலம், சோக வேளை, துக்க சமயம் என்ற சாரப்பட இங்கு கருத்து வெளியிட்டார்.

ஆனால் அது சோக வேளை அல்ல; இருண்ட காலம் அல்ல; எங்கள் உரிமைகளுக்காக உத்வேத்துடன் நாம் போரிட்ட சுதந்திர காலம். இப்போது பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பில் நாம் வாழ்வதுதான் அடிமைக்காலம், இருண்ட காலம் என்று பிரதமரின் கருத்துடன் தர்க்கிக்கின்றார் நமது தமிழ் அரசியல்வாதி ஒருவர்.

அது சரிதான். யுத்த காலத்துடன் ஒப்பிட்டால் இப்போது வடக்கு மக்களுக்கு வசதி, வாய்ப்புகள் அதிகம் உண்டு என்பது உண்மைதான். ஆனால் மன மகிழ்வு என்ற எண்ணப் பாங்கை அந்த வசதி, வாய்ப்புகளில் மதிப்பிட்டு, அளவீடு செய்து விட முடியாது என்பதுதான் நிஜநிலைமை.

யுத்தத்துக்கு மத்தியில் – குண்டு வீச்சுகள், பீரங்கி முழக்கங்கள், அதிரும் ஷெல்கள், கனன்று சீறும் சன்னங்கள் போன்றவற்றுக்கு மத்தியில் – சுதந்திரம் என்ற திருப்தியுணர்வு தமிழ்த் தேசத்தவர்களுக்கு மகிழ்வு தருவதாக இருந்தது. அது மறுக்க முடியாத உண்மை.

எனவே, வெறும் வசதி, வாய்ப்புகள், வாழ்க்கைதர இயலுமைகளை மட்டும் வைத்து மகிழ்வான தேசத்தை அளவீடு செய்து விட முடியாது என்பது யதார்த்தம்.

அப்படியிருந்தும் 146 நாடுகள் பட்டியலில் 127ஆவது இடம்தான் இலங்கைக்கு. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 129 இலிருந்து இரண்டு இடங்கள் முன்னேற்றம்.

இப்போது விலைவாசி ஏற்றம், அதனால் நேர்ந்துள்ள மக்களின் அவலங்கள், கஷ்டங்களைப் பார்க்கும் போது அடுத்த ஆண்டில் நிச்சயமாக இப்போது கடைசி நிலையில் – 146ஆவது இடத்தில் – ஆப்கானிஸ்தான் பெற்றிருக்கும் ஸ்தானம் இலங்கைக்குத்தான். அதில் சந்தேகமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைத்தான் கூறமுடியும். 'ஐந்தாம் படை' சினிமாவில் தாந்தோணி என்ற பாத்திரத்தில் நடிப்பார் நகைச்சுவை நடிகர் விவேக் நெருக்கடி வரும் சமயத்தில் பிறருக்குக் கூறுவது போல தன்னயே ஊக்கப்படுத்திக் கொள்ள ஒரு வசனம் கூறுவார் – Don't worry; Be happy (கவலைப்படாதீர்கள், மகிழ்ச்சியாக இருங்கள்). அதைத்தான் இன்றைய நிலையில் நமது மக்களுக்கு நாமும் ஆறுதலான வார்த்தைகளாகக் கூறமுடியும்.

'டோண்ட் வொறி; பி ஹப்பி!'

## மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கு கோட்டா தலைமை அரசே பொறுப்பு!

### அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன ஒப்புக்கொள்கிறார்



எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.


அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவு கொள்வனவிற்காக நாடாளாவிய ரீதியில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு பல இடங்களில் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டமும் இடம்பெற்றுவரும் நிலையில் அரசாங்கம் இதனை அறிவித்துள்ளது.

## அரசியல் கைதிகளை விடுவிக்க கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் உத்தரவை பெற வேண்டும்!

### அருட்தந்தை மா.சத்திவேல் கோரிக்கை



நீண்ட காலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அடுத்த பேச்சுக்கு முன்னர் விடுவிப்பதற்கான உத்தரவை நடக்கவிருக்கும் ஜனாதிபதிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு இம் மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதியின் நேரப்படி நடைபெறவுள்ளது. சோதிடர்களின் நல்ல நேர கணிப்பின்படியே ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்தும் அது அவர்களுக்கு நல்ல நேரமாக அமையவில்லை என்பதையே மக்கள் முகம் கொடுக்கும் பொருளாதார பிரச்சினைகள், அரசு முகம்கொடுக்கும் சிக்கல்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதியோடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடத்தும் பேச்சு தமிழ் மக்களை அரசியல் சிக்கல்களுக்கு இட்டு செல்லக்கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை மட்டும் சந்திப்பிற்கு அழைப்பது இரு தரப்பினருக்கும் இடையில் அரசியல் உறவை வளர்த்துக் கொள்ளவா? அல்லது நல்லாட்சிக் காலமென கூறப்பட்ட மைத்திரி – ரணில் ஆட்சிக் காலம் போன்று கட்சியிலிருந்து ஆதரவை பெற்று கொள்ளலாம் என்பது தொடர்பிலா தெரியவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பில் உள்நோக்கம் ஓரளவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரிந்திருக்கும் என நம்பலாம். அதன் காரணமாகவே வடக்கு, கிழக்கின் தமிழ்க் கட்சிகளோடு உரையாடாது ஜனாதிபதியை சந்திக்க செல்கின்றனர். தமிழர்களின் அரசியல் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் எனில் அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு மட்டும் ஏன் பேச்சில் ஈடுபட அழைக்க வேண்டும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனித்து ஏன் செல்ல வேண்டும்? பேச்சு என்பது கடந்த கால அனுபவங்களோடு கூட்டுத் தன்மை கொண்டதாக அமைய வேண்டும். தற்போது தமிழர்கள் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழர் தாயகத்தின் அரசியலை முன்நகர்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளைச் செய்துவரும் நிலையில் அவர்களுடைய ஆலோசனையும் பெற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியான பிரச்சினையைக் கதைப்பதற்குச் செல்ல வேண்டும்.

இந்தப் பேச்சை மையப்படுத்தி நடக்க விருப்பதாக கூறப்படும் மாகாணசபைத் தேர்தலில் அரசியல் லாபம் தேடும் முயற்சியாகவும் இது அமைந்து விடக்கூடாது. இந்த நோக்கில் மக்களைத் திசை திருப்புவது என்பது அழிவிற்கே வழிவகுக்கும்.

நலமான பேச்சுக்கான அடித்தளமாகவும் நல்லெண்ணத்தின் அடையாளமாகவும் நீண்ட காலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அடுத்த பேச்சுக்கு முன்னர் விடுவிப்பதற்கான உத்தரவை நடக்கவிருக்கும் பேச்சில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அத்தோடு புத்தர் சிலைகளை ஆக்கிரமிப்பின் சின்னமாகத் தமிழர் தாயகத்தில் பலவந்தமாக வைப்பதைத் தடுத்து நிறுத்தவும் உத்தரவிடுமாறு கோரவேண்டும்.

மேலும் நடைபெறவிருக்கும் பேச்சு அயலக மற்றும் வல்லரசுகளின் அரசியல் தேவைகளை மட்டும் நிறைவேற்றும் ஒன்றுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நலன் சார்ந்து கைக்கூலிகளாக ஏற்படக் கூடாது என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். – என மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதியை கொலை செய்த பிரதான சந்தேக நபர் கைது!

அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதியைத் தாக்கி கொலை செய்ததாகக் கூறப்படும் பிரதான சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

களுபோவில பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் காமினி லொக்குகேவின் வாகன சாரதி ஒருவர் தனிப்பட்ட பகையால் பிலியந்தலை – மாவிட்ட பகுதியில் திங்கட் கிழமை கொலை செய்யப்பட்டார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கெஸ்பேவ – மாவித்தர பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

# இராஜாங்க அமைச்சு பதவியில் நிமல் லன்சாவும் இராஜினாமா!



கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து நிமல் லன்சா இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா தொடர்பான கடிதத்தை நேற்று (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவிடம் அவர் கையளித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்மீது குற்றம் சாட்டி வருகின்றனர் என அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித் தார்.

இந்நிலையில் சில விடயங்களை சுட்டிக்காட்டி ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

நாடு மிகவும் பாரதூரமான விடயங்களை எதிர் நோக்கி வருவதால் தான் தனது அமைச்சில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக மௌனம் காத்தேன் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், அரசிலுள்ள சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மைத் தாக்கத் தொடங்கினர் என்றும் அவர் கூறியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# மேலதிக வரிச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரண் அல்ல!

## உயர் நீதிமன்று அறிவிப்பு

மேலதிக வரிச் சட்டமூலம் அரசமைப்பிற்கு முரணா னது அல்ல என உயர் நீதிமன்றம் அறிவித்துள் ளது.

அதற்கமைய நாடாளுமன்றில் சாதாரண பெரும் பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடியுமென சபாநாயகரிடம் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலபிட்டிய இதனை சபையில் தெரிவித் தார்.

அவைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த னவால் கடந்த மாதம் மேலதிக வரிச் சட்டமூலம் நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

200கோடிரூபாவுக்குஅதிகமாகவரிஅறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங் களுக்கு 25 சதவீத மேலதிக வரியை அறவிட அரசு தீர்மானித்தது.

அதன்படி ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25 சதவீத மேலதிக வரி தொடர்பான சட்டமூலத்துக்கு அண் மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதனைஅடுத்துமேற்படிசட்டமூலம்அரசமைப்பிற்கு முரணானது என உத்தரவிடக்கோரி எதிர்க்கட்சிகள் உயர் நீதிமன்றத்தை நாடியிருந்தன.

அந்தவகையில் மேலதிக வரிச் சட்டமூலத்தில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உட்பட 13 நிதியங்கள் உள்ளடக்கப்படாத வகையில் திருத்தம் செய்யப்படும் என சட்டமா அதிபர் நீதிமன்றில் உறுதி யளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்கட்டணம் 500 வீதம் அதிகரிக்கும் அறிகுறி?

## தயாசிறி ஆரூடம்



*மின்கட்டணம் பல மடங்குகளாக அதி கரிக்கக்கூடும் எனத் தகவல் கிடைத்துள்ளது என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜய சேகர தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், '2 ஆயிரத்து 180 ரூபாவாக இருந்த சமையல் எரிவாயுவின் விலை, 4 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கப் பட்டுள்ளது. இந்த விலை உயர்வைப் பார்க் கும்போது தலை சுற்றுகின்றது.*

*இந்நிலையில் இன்னும் ஓரிரு நாள்களில் மின்சார கட்டணமும் அதிகரிக்கப்படலாம்.*

*எமக்கு கிடைத்துள்ள தகவலின்படி, 30 அலகுகளுக்கான மின் கட்டணத்தை தற் போதுள்ள விலையை விடவும் 500 மடங்கு களால் அதிகரிக்குமாறு மின்சார சபை யோசனை முன்வைத்துள்ளது.*

*எனவே, மின்குமிழ்களை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையே ஏற்படும்.*

*இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.*


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## வெளிவாரிப் பரீட்சைகள்
## வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

*** முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)**
*** முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (புதிய பாடத்திட்டம்)**

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் யூன் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத் திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண் ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி **08.04.2022 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021 -222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**22.03.2022**


# அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி சுங்கை சந்தித்தார் ரணில்



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, இலங்கைக்கான புதிய அமெரிக் கத் தூதுவர் ஜூலி சுங்கை திங்கட் கிழமை சந்தித்தார்.

இன்றைய அவசர பொருளாதார சவால்களுக்கு நிலையான தீர்வுகளை காண அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து செயற்படும் வழிகள் தொடர் பாகப் பேசினோம் என அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

மேலும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டமைக்காக ரணில் விக்கிரம சிங்கவிற்கு அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் நன்றி தெரிவித்தார்.


# பருத்தித்துறை நகரசபை

பருத்தித்துறை நகரசபையின் ஆட்டிறைச்சிக்கடையினை 2022 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்பகிரங்க ஏலம்.

01.04.2022 ஆம் திகதி தொடக்கம் 31.12.2022 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு பருத்தித்துறை நகரசபையின் ஆட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்பகிரங்க ஏலம் 30.03.2022 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் நடைபெறும். ஏலக் கேள்வியில் கலந்து கொள்வோர் அன்றைய தினம் மு.ப.10.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யப்படாத வைப்புப்பணமாக ஆயிரம் ரூபாவினை (ரூபா.1000.00) செலுத்தி ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம். ஏனைய விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.யோ.இருதயராசா**
**தவிசாளர்**
**பருத்தித்துறை நகரசபை.**

**23.03.2022**

# ஈழத்தில் பஞ்ச கோபுரங்களுடன் தெல்லிப்பழை துர்க்கை அருளாசி!





- தெல்லியூர் சி.ஹரிகரன் -

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்றனர் ஆன்றோர். இலங்கைத் திருநாட்டின் சிரசமாகிய வடக்கே திருமூலரால் போற்றப்பட்ட ஈழமணித் திருநாட்டில் சைவத்தின் சிறப்புமிகு கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் என்று கோவிற்கடவையெனப் பிரசித்தம் பெற்ற திருநகரில் தெல்லிநகர் பதியில் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும்மிக்க துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பஞ்சகோபுர வாசலுடன் அம்பாள் அருளாட்சி புரிகின்றாள். 5 ஆவது கோபுரமாகிய தல வாசல் கோபுரத்துக்கு இன்று (புதன் கிழமை) மஹாகும்பாபிஷேகம்.

ஏன் கோபுர தரிசனத்திற்கு அத்தனை முக்கியத்தும் கொடுத்தார் என்றால், நமது ஆகம விதிப்படி கோவில்களை நிர்மாணித்து முறையாகக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபாடுகள் அனைத்தும் முறையாக நடந்து கொண்டிருக்கும் ஆலயங்களில் இருக்கும் கோபுரங்களின் உச்சியில் கலசங்கள் இருக்கும்.

இவ்வாறு வைக்கப்படும் கலசங்களின் உச்சியில் கூரிய முனை வழியாக வானத்தில் இருக்கும் உயிர் சக்தியை முழுமையாக அவற்றுள் கிரகித்துக் கொண்டு வெளியிடுகிறது. அந்த உயிர் சக்தியை நாம் தரிசித்துப் பெறுவதால் நமக்கு புத்துணர்ச்சி, மனதில் தூய்மையும், நோய் எதிர்ப்பு சக்திகளும் கிடைக்கின்றன. இந்த காரணங்களால் தான் 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

கோபுரத்தின் உச்சியில் இருப்பதைப் போலவே ஒவ்வொரு கர்ப்பக்கிரக கோபுரத்தின் மேலும் கலசங்கள் இருக்கும். இந்த கலசங்களும் அதே போல உயிர் சக்தியைக் கிரகித்து கலசத்தின் நேர கீழே உள்ள கர்ப்பகிரகத்தில் வீற்றிருக்கும் இறைவனின் பீடத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கும்.

ஒவ்வோர் ஆலயத்திலும் கர்ப்பக்கிரகத்தின் கிழக்கு அல்லது வடக்கு திசைகளில் அபிஷேக நீர் செல்வதற்காக துவாரம் அமைக்கப்பட்டு இருக்கும். இந்தத்துவாரத்தின் வழியே செல்லும் அபி கே நீரிலும் உயிர் சக்தி கலந்து வெளிப்படுகிறது. அதனால்தான் அபிஷேக நீர் வெளிப்படும் இடத்தில் கோவிலை வலம் வரும்போது நாம் தொட்டு கண் களில் ஒற்றிக்கொள்கிறோம். அந்த சில நொடிகளில் நம் மீதும் உயிர் சக்தி பரவுகிறது. இது ஆன்மீக ரீதியிலான விளக்கம் மட்டுமல்ல. விஞ்ஞான ரீதியாகவும் இதை நிரூபித்திருக்கிறார்கள்.

அப்படி தொடர்ந்து சக்திகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் காரணத்தினால் தான் ஆலயங்களில் சிலைகளின் குறுக்கே செல்லக் கூடாது என்று சொல்லி வைத்தார்கள். இதனால்தான் சுவாமி சிலைகளின் குறுக்கே செல்லாமல் பக்கவாட்டில் தான் செல்ல வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

இத்துணை சிறப்புமிகு கோபுர தரிசனத்தை அடியார்களுக்கு நாற்றிசையும் அருள்பாலித்துக்கொண்டு, தன் அடியார்களின் துயர் களைந்த துர்க்கா தேவி அம்மனுக்கு இன்று தலவாசல் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

**"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்**
**பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே"** – திருமந்திரம் 2883

என்கிறார் தமிழ்வேதம் தந்த திருமூலர். மாமிசங்களால் ஆன இந்த உடம்பு தன்னுடைய அகத்திலே மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பசுக்களைக் கொண்டுள்ளது. இந்த ஐந்தும் சரியான மேய்ப்பான் இன்றி வெறி பிடித்து அலைகின்றன. இந்த ஐந்து பசுக்களையும் – புலன்களையும் – அடக்குவதற்காகவே நாம் ஆலயத்துக்கு செல்கின்றோம். எமது மனத்தை ஒருமிப்பதற்காக. அதிலும் எம் புலன்களுக்கு முதல் தென்படுவது தூலலிங்கமாகிய கோபுர தரிசனம். இதனாற்றான் அது கோடி புண்ணியமாகிற்று. தெல்லிப்பழை துர்க்கை அன்னையின் கோபுர தரிசனம் பெறுவதற்கு நாற்றிசையில் எந்த வாயிலால் நாம் ஆலயத்துக்குள் நுழைந்தாலும் எமக்கு இலகுவில் கோபுர தரிசனம் கிடைக்கப்பெற்றுவிடும். கோடி புண்ணியத்தை அடைந்துவிடலாம்.

கதிர்காமர் என்னும் சைவப்பெரியார் தெல்லிப்பழையிலுள்ள உழுகுடைப்பதியில், வவுனாவத்தையில் சைவமரபிலே தோன்றியவர். திருமூலர் வாக்கிற்கிணங்க 'ஊனுடம்பு ஆலயம்' என்னும் சைவநெறியின் உத்தமநெறியிலே ஒழுகியவர். எங்கெல்லாம் சைவாலயங்கள் காணப்படுகின்றனவோ அங்கு சென்று வணங்கித் தலயாத்திரை செய்வதில் இன்பங்கொண்டவராகக் காணப்பட்டார். இவரது இந்த ஆர்வத்தின் பயனாகவே தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் தோன்றியது.

வவுனாவத்தை உழுகுடைப்பதியில் வசித்த பெரியவர் கதிர்காமர், 1750 ஆம் ஆண்டளவில் தலயாத்திரை செய்யத் தீர்மானித்தார். அண்மையிலிருந்த காங்கேயன் துறையிலிருந்து தோணியேறி, தென்னிந்தியாவிலுள்ள வேதாரணியம் கரையை அடைந்தார். இவர் தலயாத்திரை சென்ற காலத்தில் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் எவையும் கிடையா. விரும்பியபோது, விரும்பிய இடங்களுக்குச் சென்றுவர எந்தத் தடையும் காணப்படவில்லை. வேதாரணியத்திலுள்ள தலங்களைத் தரிசித்த கதிர்காமர், பாதயாத்திரையாகக் காசி செல்லத் தீர்மானித்தார். பாதயாத்திரை செல்லும் வழியிலுள்ள தலங்களைத் தரிசித்து இறுதியில் காசியை அடைந்தார். ஏறக்குறையப் பத்துவருடங்களாகத் தலங்களையெல்லாம் தரிசித்து வழிபாடாற்றி வந்தார். இக்காலப்பகுதியில் தமிழில் மேலும் தேர்ச்சிபெற்றதோடு சமஸ்கிருதத்தையும் கற்றுத் துர்க்காதேவி உபாசகராக மாறியிருந்தார். 1760 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பத் தீர்மானித்த கதிர்காமர், தன்னோடு துர்க்காதேவி இயந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த திருமுகக்கெண்டி ஒன்றையும் கொண்டு வந்தார்.

திருக்கோயிலின் உயிர்நிலையாக மூலஸ்தானம் அல்லது கருவறையில் எழுந்தருளியுள்ள திருவுருவம் விளங்குகின்றது. திருக்கோயிலுக்குச் செல்லும்பொழுது முதலில் கண்ணில்படுவது கோபுரம். முதலில் கோபுரத்தை வணங்கிய பின்னர் கோயிலினுள் சென்று கருவறையில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியையும் ஏனைய தெய்வங்களையும் வழிபடுகின்றோம்.

திருக்கோயில்களிலே எழுந்தருளியுள்ள இத்தெய்வங்களின் அருள்வீச்சிற்கு, மந்திரங்களால் அருள்பெற்ற யந்திரப்பிரதிஷ்டையும் கும்பாபிஷேகக் கிரியைகளுமே காரணமாகக் காணப்படுகின்றன. கோயிலின் உயிர்நிலையாகவுள்ள கருவறைத் திருவுருவம் இறைவனின் அருள் வடிவமாகவும், கோபுரம் இறைவனின் அருட்சின்னமாகவும் விளங்குகின்றன. சாதாரண உலகவழக்கில் யந்திரம் என்பது இயக்கும் கருவியைக் குறிப்பது. யந்திரம் இல்லாத வண்டி ஓடாது. அதே போல யந்திரபிரதிஷ்டை செய்யப்படாத திருவுருவத்தில் பூரணமான தெய்வீக அலைகள் ஏற்படுவதில்லை எனப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளன.

இவ்வாறான மந்திரசக்தியுள்ள துர்க்காதேவி யந்திரமொன்றைப் பெரியவர் கதிர்காமர், ஈழம் திரும்பும்பொழுது கொண்டுவந்தார். இந்தியாவிலுள்ள சக்திபீடங்கள் அறுபத்து நான்கு எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் காசியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் சொப்பனேஸ்வரி பீடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இங்குள்ள துர்க்காதேவி பீடம். சகல கலைகளுடனும் அருட்பொலிவுடன் விளங்கும் சக்திபீடமாக விளங்குகின்றது. பல வருடங்கள் காசியில் தங்கியிருந்த கதிர்காமர், அன்னையின் பெருமையையும் புகழையும் எண்ணத்தில் கொண்டு, தன்னுடன் கொண்டு வந்த யந்திரத்தைக் காசியிலிருந்தே பெற்றிருக்க வேண்டும் என்பது சான்றோர் கருத்தாகக் காணப்படுகின்றது.

காசியாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிய கதிர்காமர், காங்கேயன்துறையை வந்தடைந்து, கீரிமலை சென்று அங்கு தீர்த்தமாடி, ஆலயதரிசனம் செய்தார். பின்பு அங்கிருந்து மூன்று மைல் தூரமுடைய தெல்லிப்பழையை நோக்கி நடந்துவந்து கொண்டிருந்தார். இவ்வாறு நடந்து வரும்பொழுது களைப்பு மேலீட்டால் நடையிலே தளர்வு கண்டார். இந்தியாவெங்கும் பல நூற்றுக் கணக்கான மைல்களைப் பாதயாத்திரையாகச் சென்ற கதிர்காமரின் உள்ளக் கிடக்கையில் ஒளிந்திருந்த அன்னை துர்க்கையானவள், அவ்விடத்திலே தங்கத் திருவுளம் கொண்டாள் போலும். களைப்பு மேலீட்டால் அங்கிருந்த இலுப்பைத்தோப்பிலே இளைப்பாறினார்.

திருவருட் கருணையால் அவர் முன் ஒருசோதி தோன்றி, அவர் காசியிலிருந்து கொண்டுவந்த துர்க்கா யந்திரத்தை அவ்விடத்திலே ஸ்தாபிக்குமாறு ஆணையிட்டது. அவ்வாக்கைச் சிரமேற்கொண்ட கதிர்காமர், அவ்விடத்திலிருந்த இலுப்பை மரத்தடியில் யந்திரத்தையும் திருமுகக் கொண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபடத் தொடங்கினார். இவ்வாறு இவர் வழிபட ஆரம்பித்த இடமே இன்று தெல்லிப்பழை, உழுகுடைப்பதி துர்க்காதேவி தேவஸ்தானமாக மாறியுள்ளது.

இத்தோப்பிலே பூசைநேரத்தில் நாக சர்ப்பங்கள் வருவதுண்டு. அவை பூசை முடிந்தவுடன் மறைந்துவிடும். இந்த நாகசர்ப்பங்களால் எவருக்கும் எவ்விதமான துன்பமும் ஏற்படவில்லை. இவற்றைக்கண்டு பக்தர்கள் அச்சமடையாது வழிபட்டு வந்துள்ளனர். பூசை நேரங்களில், குருக்கள் இவற்றுக்குப் பாலும் பழமும் வைத்து வழிபடுவதும், அவை இவற்றை உட்கொள்ளவதும் உண்டு. இவ்வாறு கதிர்காமரால் ஸ்தாபனம் செய்யப்பட்ட துர்க்காதேவி யந்திர வழிபாடு ஆன்மார்த்த வழிபாடாகவே ஆரம்பத்தில் காணப்பட்டது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தில் பஞ்ச .........

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலத்தில் அழகிய தேவஸ்தானமாகி, நாற்றிசையும் கோபுரமும் அலங்கார வளைவும் கொண்ட நுழைவாயிலுடன், தற்கோது நுழைவாயில் கோபுரம் – தலைவாசல் கோபுரத்துடன் – தெப்பக் குளமும் அமைந்து எழிலுக்கு எழிலூட்டும் அருள்மிகு சக்தி ஆலயமாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் விளங்குகின்றது.

ஆன்மார்த்த வழிபாட்டு முறையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம், தற்காலத் தில் ஆகமமுறைப்படி நடைபெறும் வழிபாட்டு முறைகளைக் கொண்ட பரார்த்த பூசைக்குரிய தேவஸ்தானமாக மாற்றம்பெற்றுள்ளது. ஏறக்குறையநூற்றிஐம்பதுஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சிபுரத் திலிருந்து அந்தணப்பெரியாரொருவர் யாத்திரை நோக்கமாகப் படகு மூலம் காங்கேயன்துறையை வந்தடைந்தார்.

அங்கிருந்து புறப்பட்டுத் தெல்லிப்பழையை வந்தடைந்தார். களைப்பு மேலீட்டாலும் பசியாலும் உமுகுடைப்பதியில் ஒரு மரத்தின் கீழ் அயர்ந்து துங்குவராயினர். உமுகுடைப்பகுதியில் நாகநாத உடையார் என்பவர் செல்வமும் செல்வாக்கும் படைத்தவராகக் காணப்பட்டார். ஒரு குறித்ததினத்தன்று அவருடைய கனவிலே ஸ்ரீ துர்க்காதேவி தோன்றி, தன்னையும் அநாதரவாயிருக்கும் காஞ்சி அந்தணரையும் ஆதரிக்குமாறு உணர்த்தினாள். ஆதியில் கதிர்காமர் காசியிலுள்ள சக்தி பீடங்களுள் ஒன்றான சொப்பனேஸ்வரி பீடத்திலிருந்தே துர்க்காதேவி யந்திரத்தைக் கொண்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. சொப்பனம் என்றால் கனவு என்று பொருள்படும். சொப்பனத்தில் தேவி உணர்த்திய அருள்வாக்கின்படி, நாகநாத உடையார் ஆலயத்தையும் அந்தணரையும் ஆதரிக்க முற்பட்டார். தேவியின் கருணைக்குப் பாத்திரமாக விளங்கிய காஞ்சியிலிருந்து வந்த அந்தணரையே துர்க்காதேவி ஆலய அர்ச்சகராக நியமித்தார்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கிய தெல்லிப்பழை துர்க்கைக்கு, அம்மனின் அருட்பெரும் கடாட்சத்தால், சைவத்தமிழ் மீது அதீத பற்றுக்கொண்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிர்வாகசபைத் தலைவரானார். துர்க்கையே கதியென வாழ்ந்த அம்மையார், 1981 ஆம் ஆண்டு, சித்திரை மாதம், கிழக்கு வாயில் இராஜகோபுரத்துக்கு நடைபெற்ற மஹாகும்பாபிஷேகம் மிகச்சிறப்புடையது. இந்த விழாவிற்குத் தமிழகத்திலிருந்து வேதவிற்பன்னர்களும், உறரிதாஸ் சுவாமிகளும் வருகை தந்தனர். இதேயாண்டு மே மாதம் இவ்வாலய முன்றிலில் சென்னை சைவசித்தாந்த மாநாட்டுப் பவளவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழகச் சைவசித்தாந்த பீடத்துக்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் ஐம்பதினாயிரம் ரூபாவை வைப்பு நிதியாக வழங்கியமை, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் சமய, சமூக மேம் பாட்டில் கொண்ட ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் பேணிக்காத்த சைவமரபைப் பேணிக்காப்பதில் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் அன்றும் இன்றும் முன்ன ணியில் நிற்கின்றது.

2018 ஆம் ஆண்டு ஜுன்மாதம் அம்மையார் இறையடி சேர்ந்த பின், ஈழத்து ஆதிசங்கரர் என்று போற்றப்படும் கலாநிதி ஆறு. திருமுருகனிடம் துர்க்கை அம்மன் தன்பெரும் கடாட்சத்தால் ஆலயத்தை ஒப்படைத்தார். சங்கரர் 32 ஆண்டுகளில் சாதித்தமை போன்று, வடக்கில் சைவத்துக்காக தெல்லிப்பழை துர்க்கையுடன் மட்டும் நின்றுவிடாது வடக்கு கிழக்கு என எங்கெல்லாம் சைவ மக்கள் வாழ்கின்றார்களோ – அங்கெல்லாம் சைவம் நிலைபெறுவதற்காக – அந்த மக்களின் வாழ்வு வளம்பெறுவதற்காக – கலாநிதி ஆறு.திருமுருகன் அருட்பணியாற்றுகின்றார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு 2017, 2018, 2019 என்று அடுத்தடுத்து மூன்று வருடங்களில் வடக்கு வாயில், தெற்கு வாயில், மேற்கு வாயில் என்று நாற்றிசையும் கோபுர தரிசனத்தை பக்தர்கள் பெறும்வகையில் உருவாக்கினார். இதில் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவென்றால் ஒரு கோபுர நிர்மாணப் பணிகள் ஒரு வருடத்துக்குள் நிறைவேற்றப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடத்தியமை அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட அருட்கடாட்சத்தை வெளிப்படுத்துகின்றது. அடுத்தடுத்த மூன்று வருடங்களில் மூன்று கோபுரங்கள்.

இன்று (புதன்கிழமை) தலைவாயில் – நுழைவாயில் – கோபுரத்துக்கு மஹா கும்பாபிஷேகம். இந்தக் கோபுரமும் அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு வருடத்துக்குள் பூர்த்தியாகியுள்ளது. இந்தியாவின் புகழ்பூத்த சிற்பக் கலைஞர் புருஷோத்தமனின் கைவண்ணத்தில் இந்தக் கோபுர சிற்ப வேலைகள் அமையப்பெற்றுள்ளன.

இந்தியாவின் திருச்செந்தூர், திருவண்ணாமலை, மதுரை போன்ற பிரசித்தி பெற்ற தலங்களில் அமைந்துள்ள தலைவாயில் கோபுரம் போன்று ஈழமணித் திருநாட்டில் முதலாவதாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் காட்சியளிக்கின்றார். 57 அடி உயரமுடையதாக இந்தக் கோபுரம் எழுந்தருளியுள்ளது.


இந்தக் கோபுர உருவாக்கத்துக்கு அநுராதபுரத்தில் வசிக்கின்ற காரைநகரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் 50 ஆயிரம் செங்கட்டிகளை வழங்கியுள்ளார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் தனாதிகாரி அமரர் தணிகாசலம் அவர்களின் மகன் லண்டனில் வசிக்கும் விஜயகுமார் 55 லட்சம் ரூபாக்களையும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் வர்ணப்பூச்சு வேலையையும் மற்றும் அடியார்களின் நன்கொடைகளால் இன்று கோபுரம் அடியார் தரிசனத்துக்காக எளுந்தருளியுள்ளது.

**"நம்பினார் கெடு வதில்லை: நான்கு மறைத் தீர்ப்பு!**
**அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்"**

– என்ற பாரதியின் அடிகளை மனதிலிருத்தி தெல்லிநகர் துர்க்காதேவி பாதம் பணிவோம்.

# பாதுகாப்பை வழங்கவே இராணுவத்தினர் குவிப்பு!

## அமைச்சர் காமினி லொக்குகே கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 23

வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கும் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பாதுகாப்பை வழங்கவே இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளேன் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த மூன்று பேரும் தகராறு ஏற்பட்டதால் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதைக் கண்காணிப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிலும் தலா இரண்டு இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# மல்வத்து மற்றும் அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர்கள் 14 விடயங்களை சுட்டிக்காட்டி கோட்டாவுக்கு கடிதம்

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேசிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மேலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட பல தரப்பு மாநாட்டை கூட்டி, நிலையான அபிவிருத்திக்காகத் திட்டமொன்றை வகுப்பதன் முக்கியத்துவம் உள்ளிட்ட 14 விடயங்களை சுட்டிக்காட்டி இந்தக் கடிதத்தை அவர்கள் எழுதியுள்ளனர்.

அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளின் பட்டியலின்படி, அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மாதிரியை உருவாக்குதலும் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக் காலத்தில் முறையற்ற நிதியீட்டல்களுக்காக அத்தியாவசியமான பொருள்களில் செயற்கையாகப் பற்றாக்குறையை உருவாக்கும் மோசடி வியாபாரிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதலீட்டை ஊக்குவிக்கவும், வெளிப்படையான பொருளாதாரத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தை அதிகரிக்கவும், ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் என்பன அந்தக் கடிதத்தில் முன்மொழியப்பட்டுள்ளன.

நாட்டில் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல், அரச கடனை மறுசீரமைத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குதல், வீண்விரயம், ஊழல் மற்றும் வளதுஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்க நிலையான திட்டத்தை வகுக்கவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சி பேதமின்றி நாட்டைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்புவதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பூரண பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அவசியம் என்று தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# 16 வீதத்துக்கும் அதிகமான பல்கலை மாணவர் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர்

## புதிய ஆய்வில் தகவல்

கொழும்பு, மார்ச் 23

அரச பல்கலைக்கழகங்களில் 16.6 சதவீத மாணவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர் என புதிய ஆய்வில் வெளிவந்துள்ளது.

அண்மைக் காலமாக இலங்கை யில் உள்ள அரச பல்கலைக்கழகங் களில் பகிடிவதை மற்றும் பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

இந்தச் செயற்பாடுகள் கவலையளிக்கின்றன எனபல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

51 வீதத்துக்கும் அதிகமானோர் வாய்மொழி துன்புறுத்தலுக்கும், 34.3 வீதம் உளவியல் வன்முறைக்கும், 23.8 வீதம் உடல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கும், 16.6 வீதம் பேர் பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகியுள்ளனர்.

ஊழியர்களில் 44 வீதம் பேர் வாய்மொழி துஸ்பிரயோகத்திற்கும், 22.3 வீதம் பேர் பாலியல் லஞ்சம் கோரினர் எனவும், 19.9 வீதம் பேர் உடல்ரீதியான பாலியல் வன்முறையை அனுபவித்தனர் எனவும் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

மேலும் பொதுத்துறை பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களில், 21 வீதம் பேர் வாய்மொழி பாலியல் துஷ்பிரயோகத்துக்கும், 1.5 வீதம் பேர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பகிடிவதை என்பது முதலாவது ஆண்டில் மட்டுமே நடப்பதாகக் கருதப்பட்டாலும், அவை தொடர்கின்றன எனவும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

மாணவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் சமீபத்தில் மேலதிக விதிமுறைகளை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு வகுத்துள்ளது.

அதன்படி, சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும், குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத்தண்டனை, வெளியேற்றப்படுதல் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட நஷ்டஈடு செலுத்துதல் ஆகியவை அடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு புதிதாக இணைத்துக் கொள்ளும் மாணவர்களை துன்புறுத் துவதில் ஈடுபடமாட்டோம் என அனைத்து மாணவர்களும் எழுத்து மூலம் உறுதியளிக்க வேண்டும் என்பது மேலதிக நிபந்தனையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தற்போது நாட்டிற்கு பொருளாதார நோய்!

## பீடித்துள்ளது என்கிறார் ஜனா



தற்போது பொருளாதார நோய் பிடித்திருக்கின்றது. பொருளாதார நோய்க்கும் மேலாக எங்களது உரிமையைப் பெறுவதற்கான நோய் இருக்கின்றது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்துள்ளார்.

நாட்டு வைத்தியர் க.விஸ்வலிங்கம் எழுத்திய நோய் நிவாரணி எனும் நூல் வெளியீட்டு விழாவும், சித்த வைத்திய முகாமும் மட்டக்களப்பு மாவட்டம் பழுகாமம் சிவன் ஆலய முன்றிலில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நோய் நிவாரணி என்ற புத்தகம் உண்மையிலேயே எங்களது தமிழ் இனத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகமாக நான் பார்க்கின்றேன்.

7 தசாப்தங்களுக்கு மேலாக அஹிம்சைப் போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் நடத்தி 2009 ஆம் ஆண்டு எங்களது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் கூட அந்த நோய்க்கான நிவாரணம் கிடைக்காமல்தான் நாங்கள் இருக்கின்றோம்.

அந்த நிவாரணத்தை நாங்கள் எங்கு யாரிடம் இருந்து பெறுவது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கின்ற ஏனைய கட்சிகள் கூட என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தான் மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் அரசாங்கங்கள் எங்களது உரிமையைப் பெறுவதற்கான – பாதிக்கப்பட்டிருக்கும் இந்தத் தமிழினத்தை நோக்கி ஒரு நிவாரணத்தைக் கூட மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் எந்தவோர் அரசாங்கமும் எந்த ஒரு ஜனாதிபதியும் எந்த நிவாரணத்தையும் கொடுக்க முடியாத சூழ் நிலையில் இருக்கின்றார்.

இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் தற் போதைய காலகட்டத்தில் நாட்டிலே இந்த நோய்க்கான நிவாரணத்தைக் கொடுப்பாரா என்று பார்த்தால் அது முடியாமல் இருக்கின்றது. பொருளாதார நோய் பிடித்திருக்கின்றது. பொருளாதார நோய்க்கும் மேலாக எங்களது உரிமையைப் பெறுவதற்கான நோய் இருக்கின்றது. அந்த வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு இன்று பல வழிகளில் அழுத்தங்கள் இருக்கின்றன. சர்வதேச அழுத்தம் இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மற்றும் இந்தியாவின் அழுத்தம் இருக்கின்றன. அதைவிட இந்த நாட்டின் ஜனாதிபதி, தான் ஒரு பௌத்த சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்று தனக்கு 69 லட்சம் சிங்கள மக்கள் தன்னை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்கி இருக்கின்றார்கள் என்று கூறிக் கொண்டிருக்கும் இந்த ஜனாதிபதிக்குகூட அந்த 69 லட்சம் மக்களும் இந்த ஜனாதிபதிக்கு ஏன் வாக்களித்தோம் என்று வெட்கப்படுகிறோம் எனத் தெரிவித்து தற்போது வீதிக்கு இறங்கியுள்ளார்கள்.

இவ்வாறு இந்த நாட்டின் அரசும் அரசியல் கட்சிகளும் ஜனாதிபதி அவர்களும் இருந்து கொண்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நோயிற்கு நிவாரணம் பெறுவதற்காக அழைத்திருக்கின்றார்கள். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கமான தமிழீழ விடுதலை இயக்கம். தமிழீழ விடுதலை இயக்கம் 50 ஆண்டுகளுக்கு மேலாக போராட்ட களத்தில் இருந்த நாங்கள் இந்தத் தமிழீழ விடுதலை இயக்கம் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியாக இருந்து எங்களது கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரணத்தின் பக்கத்தில் இருந்து சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கும் அழுத்தம் காரணமாக கடந்த 15 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேசுவதற்கு அழைத்திருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கமான தமிழீழ விடுதலை இயக்கம் நாங்கள் அதை மறுதலித்து இருக்கின்றோம். என்ன காரணம் என்றால் இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று இன்று வரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் இனத்துக்கு ஓர் இனப் பிரச்சினை இருக்கின்றது. அதற்கான ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என அவர் எந்த இடத்திலும் கூறவில்லை.

அப்படியானவருடன் ஏன் அரசியல் தீர்வு சம்பந்தமாக நாங்கள் பேச வேண்டும் என்பதுதான் எங்களது முக்கியமான கேள்வி. அதற்கும் மேலாக ஓர் அரசியல் தீர்வை இந்த நாடாளுமன்றத்தின் ஊடாகக் கொண்டுவர வேண்டுமாக இருந்தால் அரசமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் தேவை. ஆனால், அவருடன் இருந்தவர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களுக்கு 30 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இன்று அவரை விட்டு வெளியேறிச் சென்றபோது அவரின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கு இல்லை. இதனால் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாத நிலையில் எங்களுனுடன் பேசி எப்படி ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வரப்போகின்றார். அந்த ரீதியில் அவருடன் பேசி எந்தப் பிரயோசனமும் இல்லை.

கடந்த 15 ஆம் திகதி எங்களைப் பேச்சுக்கு அழைக்கின்றார். அதன் இணைப்பாளராக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இருக்கின்றார். இந்நிலையில் அதே 15 ஆம் திகதி இலங்கையில் இனப்படுகொலை ஒருபோதும் இடம்பெறவில்லை. ஜனாதிபதி கூட்டமைப்பு பேச்சு நல்ல ஆரம்பம் என்கின்றது அரசு என வெளிநாட்டமைச்சரின் செயலாளர் ஓர் அறிக்கை விடுகின்றார்.

அப்போ இந்த நாடகம் எதற்கு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் பெரும்பாலான பிரதிநிதிகளை அழைத்துப் பேசி கண்டேன் என்று எங்களை ஒரு பகடைக்காயாக மாற்றி சர்வதேசத்தில் இருந்துவரும் அழுத்தத்தை குறைப்பதற்காக சர்வதேசம் அழுத்தம் கொடுக்கும் போது நாங்கள் உள்நாட்டில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம் எனக்கூறி அழுத்தத்தை நீங்கள் தரவேண்டாம் நாங்கள் எங்களது பெரிய பிரச்சினையை நாங்கள் உள்ளேயே பேசி தீர்த்துக்கொள்வோம் என்று சொல்வதற்காக இப்படி ஒரு நாடகத்தை ஆடுகின்றார் என்பதில் தமிழீழ விடுதலை இயக்கம் உறுதியாக இருக்கின்றது. – எனத் தெரிவித்தார்.

# கல்லடிப் பாலத்துக்குக் கீழ் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு கீழ் ஆண் ஒருவரின் சடலம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது வேறு காரணங்கள் உள்ளனவா என்பது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.








# 158 ஆவது தேசிய பொலிஸ் வீரர் தினம் பொலிஸ் திணைக்களத்தால் அனுஷ்டிப்பு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 158 ஆவது தேசிய பொலிஸ் வீரர்கள் தினம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

நாட்டுக்காக உயிர்நீர்த்த பொலிஸ் வீரர்களை நினைவுகூரும் வகையில் நடத்தப்படும் இந்த நிகழ்வின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன்பாகவுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத்தூபியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது பொலிஸ் கொடியேற்றப்பட்டதுடன் பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இரண்டு நிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதுவரையில் இலங்கையில் 3 ஆயிரத்து 143 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளமையுடன் இதில் யுத்த காலத்தில் 2 ஆயிரத்து 598 பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஏனைய வகையில் 545 பொலிஸ் உத்தியோகத்தர்களும் உயிரிழந்துள்ளனர் என இங்கு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி தெரிவித்தார்.

# யாழ்.இந்தியத் துணைத் தூதருடன் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், மார்ச் 23

தீவகப் பகுதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் வருகை தொடர்பாக கடற்றொழிலாளர் சம்மேளனப்பிரதிநிதிகள்யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரனை சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று மதியம் யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது ஏற்கனவே யாழ். மாவட்ட மீனவர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் காரணமாக இலங்கை எல்லைக்குள் அத்து மீறிய இந்திய இழுவை மடிப் படகுகளின் வருகை கட்டுப்படுத்தப் பட்டிருந்த நிலையில் மீண்டும் எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய தீவகப் பகுதிகளில் இந்தியப் படகுகள் எல்லை தாண்டி வருகின்றன எனவும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா, தீவகப் பகுதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் வருகை சில நாட்களாக அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துமாறு இந்தியத் துணைத்தூதரிடம் கோரியதாகக் குறிப்பிட்டார்.

# கொழும்பில் சீரடி சாயி பாபாவின் ஆலய மஹோற்சவ கும்பாபிஷேகம்











கொழும்பில் கொட்டாஞ்சேனை சீரடி சாயி பாபாவின் ஆலய மஹோற்சவ கும்பாபிஷேகம் கடந்த வெள்ளியன்று பக்தி பூர்வமாக நடந்தேறியது.

அதில் கலந்து சிறப்பிக்க வருகை தந்த சென்னை மைலாப்பூர் சீரடி சாயி பாபா ஆலய அகில இந்திய சாய் சமாஜத்தின் தலைவர் கே.தங்கராஜ் மற்றும் ஏ.செல்வராஜ் ஆகியோர் சீரடி சாய் சமாஜத்தில் எஸ். என். உதயநாயகம் தலைமையில் நண்பகல் நடைபெற்ற சீரடி பூஜை நிகழ்வில் கலந்து கொண்டமையையும் கும்பாபிஷேக நிகழ்வில் பங்கு பற்றிய சீரடி,சாய் பத்தர்களையும் படங்களில் காணலாம்.

# ஆட்டம் காணும் அரசுக்கு முண்டுகொடுக்காதீர்கள்

## சு.கவிடம் விமல் வலியுறுத்து

ராஜபக்ஷ அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்த அரசுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இனியும் முண்டு கொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேற வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாமும் பொறுமை காத்து அரசுக்கு முண்டுகொடுத்து வந்தோம். இறுதியில் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார்.

தற்போது அமைச்சர்கள் தாமாகவே பதவியிலிருந்து விலக ஆரம்பித்துள்ளனர். சுதந்திரக் கட்சியினர் இனியும் இந்த அரசுக்கு முண்டுகொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேற வேண்டும்.

ராஜபக்ஷ அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினரைச் சமாளிக்கவே சர்வ கட்சி மாநாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்துகின்றார்.

இதைப் புரிந்துகொண்டு எதிர்க்கட்சிகளும் மாநாட்டைப் புறக்கணித்துள்ளன. எமது கட்சியும் மாநாட்டுக்குச் செல்லாது.

சுதந்திரக் கட்சியுடனோ அல்லது வேறு எந்தக் கட்சியுடனோ கூட்டுச் சேர்வது தொடர்பில் நாம் இன்னமும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை. நாம் தற்போது மக்கள் பக்கம் நின்றே செயற்படுகின்றோம் – என்றார்.

## மூத்த அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

எமது மாவட்டத்தின் முதுபெரும் அரசியல் தலைவரான அவருக்கு, கிளிநொச்சியின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் கணிசமான பங்குண்டு. 1950 ளின் பின்னரான அரசியல் வரலாற்றில், கிளிநொச்சி மாவட்டத்துக்கெனத் தனித்துவமான அரசியல் கலாசாரத்தைக் கட்டி வளர்த்த பெருமையும் அவரையே சாரும்.

எனது தந்தையார் சின்னத்துரை சிவஞானம், மாமனார் கந்தையா பொன்னுத்துரை (அப்பையா) ஆகியோரின் நெருங்கிய நண்பராக இருந்தமையும், தனது சிந்தனை, செயல்களின் வழி இந்த மாவட்டத்தை நேசித்த ஓர் தனிப் பெரும் மனிதனாக வாழ்ந்தமையும் அவருக்கும் எனக்குமிடையே இருந்த மிக நெருக்கமான உறவுநிலைக்குக் காரணமாயிற்று.

இத் தனிமனித உறவுநிலைகளுக்கு அப்பால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆணிவேராக இருந்து, அந்தக் கட்சிக்கும், கட்சி நலன்களைக் கடந்து இந்த மாவட்டத்துக்கும் மகத்தான பணியாற்றி நேற்று இவ்வுலக வாழ்வை நீத்த ஐயாவின் ஆத்மா அமைதிபெற பிரார்த்திக்கின்றேன் – என்றுள்ளது.

## கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் – கோட்டையில் நேற்று மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியை இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நெதர்லாந்து நாட்டின் தூதுவர் தஞ்சா கோங்கிரிஜ்ப் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், ஓய்வுபெற்ற வரலாற்று துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வடக்கு கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதிலும் அதற்கான பதில் கிடைக்காமல் நேற்று அவர்கள் அமைச்சின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலையில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் காலையில் அலுவலகத்துக்கு வருகை வந்த உத்தியோகத்தர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து பொலிஸாரின் தலையீட்டால் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வடக்கு மாணத்தைச் சேர்ந்த 186 தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எமது தாயக நிலங்களை ஆக்கிரமிக்க வருபவர்களுக்கு பூமாலை அணிவிப்பது இனத்துக்கு இழைக்கும் துரோகம்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோபாவேசம்




எங்களின் நிலத்தை ஆக்கிரமித்து அதனை பௌத்தமயமாக்க வந்தவர்களை எங்களின் ஒட்டுண்ணிகள் வரவேற்று பூமாலை அணிவித்திருக்கின்றார்கள்.

இது எமது இனத்துக்கு அவர்கள் செய்யும் துரோகம் ஆகும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கொடூர யுத்தத்தை நடத்தி, எமது இனத்தை அழித்தவர்களுக்கு எதிராக அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் அரசு ஆட்டம் கண்டு கொண்டுள்ளது. இந்நேரத்தில் நாம் ஒற்றுமையாக ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும்.

இந்த இன்னல்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாம் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தை நடத்தி இருந்தோம்.

அதன் போது, வயது முதிர்ந்த தாய்மார்களை ஈவிரக்கமின்றி குண்டாந்தடிகளால் அடித்தும், சப்பாத்து கால்களால் மிதித்தும் எங்களை அவமானப்படுத்தி அநாகரிகமாகவும் நடந்து கொண்டனர்.

எங்களின் நிலத்தை ஆக்கிரமித்து அதனை பௌத்தமயமாக்க வந்தவர்களை எங்களின் ஒட்டுண்ணிகள் வரவேற்று பூமாலை அணிவித்திருக்கின்றார்கள். இது எமது இனத்திற்கு அவர்கள் செய்யும் துரோகம் ஆகும்.

எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என சொல்ல முடியாதவர்கள், இன்று மக்களுக்கு அரிசி இல்லை, பெற்றோல் இல்லை, டீசல் இல்லை எனச் சொல்லுபவர்கள் வடக்கில் வந்து பொருளாதார நிலையத்தை திறக்கின்றார்கள்.

அவர்களிடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் வரையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான எங்களின் போராட்டம் தொடரும்.

எமக்குப் பின்னால் நின்று எமக்காகக் குரல் கொடுக்க எமது தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும். ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தின் போது எமது முல்லைத்தீவு மாவட்ட சங்கத் தலைவி அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளை, வவுனியா மாவட்ட தலைவியும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, திங்கட்கிழமை சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

அவர் நடக்க முடியாத நிலையில் உள்ள போதும் அவருக்கு உடல் நிலை சரியாகி விட்டது என வைத்தியர்கள் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர். வைத்தியர்கள் கூட அரசிற்கு பரிவட்டம் பிடிக்கத் தொடங்கி விட்டார்களோ என சந்தேகிக்கிறோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறும் அரசியல் தலைமைகள்!

## நஸீர் அஹமட் போட்டுத்தாக்கு

கொழும்பு, மார்ச் 23

நாட்டின் நெருக்கடிக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அரசியல் தலைமைகளும் தடுமாறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாழ்க்கைச் செலவு உச்சக் கட்டத்திற்குப் போய் மக்களுடைய இயல்பு வாழ்க்கையைப் பாதித்திருக்கின்ற ஒரு பயங்கரமான கால கட்டம். மக்கள் ஒரு வேளை உணவுக்காகப் போராடுகின்ற நிலைமை. நாட்டின் நெருக்கடிக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அரசியல் தலைமைகளும் தடுமாறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்ததிலிருந்து கடந்த 70 வருட காலமாக நாடு ஒரு தவறான அரசியல் வழி நடத்தலில் சிக்குண்டதான விளைவாகத் தான் இப்பொழுது இந்த நாடு இந்த நிலைமைக்குள் வந்துள்ளது.

நாட்டை விற்றால்தான் கடன் சுமை தீருமென்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது. எந்த அரசியல் தலைமைகள் இந்த நாட்டை ஆண்டபோதும் கடன் தொகை கூடியதே தவிர குறையவில்லை. அதனால்தான் பாரிய சிக்கலுக்குள் நாடு அகப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, இந்த நாட்டிலே இடம்பெறுகின்ற அரசியல் விடயங்களை முஸ்லிம் சமூகம் வெறுமனே பார்த்துக் கொண்டு பேசா மடந்தைகளாக இருந்து விட முடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் தொடங்கி இந்திய பிராந்திய அரசியல் என்று காய் நகர்த்தல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை முஸ்லிம் சமூகம் உற்றுக் கவனித்து இராஜதந்திர ரீதியில் பல விடயங்களை காய் நகர்த்த வேண்டிய தேவை உள்ளது. – என்றார்.

# இலங்கை சாரணர் இயக்கக் கொடி தினத்தின் முதல் கொடி பிரதமருக்கு அணிவிக்கப்பட்டது!

இலங்கை சாரணர் இயக்கத்தின் 105 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கொடி தினத்தின் முதலாவது கொடி இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவி தலைமை ஆணையாளர் நிர்மலி வில்லியம் அவர்களால் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அணிவிக்கப்பட்டது.

இதன்போது சாரணர் இயக்கத்தின் வரலாறு தொடர்பாக எழுதப்பட்ட நூலொன்று இலங்கை சாரணர் இயக்கத்தின் தொடர்பாடல் ஆணையாளர் ருக்ஷானி அஸீஸால் பிரதமருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

சாரணர் இயக்கத்தின் நிறுவுநரான ரொபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் – பவேலின் சகோதரியான மிஸ் ஆலிவ் பேடன் – பவேல் தலைமையில் 1910 ஆம் ஆண்டு சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

140 நாடுகளைச் சேர்ந்த ஒரு கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய தன்னார்வப் பெண்கள் அமைப்பான உலக சாரணர் சங்கத்தில் இலங்கை 1917 ஆம் ஆண்டு மார்ச் 21 அன்று அங்கத்துவம் பெற்றது.

கண்டி பெண்கள் உயர்நிலைப் பாடசாலையின் அதிபராக இருந்த சான்சனின் முயற்சியின் பலனாக ஜென்னி கால்வர்லின் தலைமையில் இது நடைபெற்றது.

தற்போது இலங்கை சாரணர் இயக்கத்தில் நாடளாவிய ரீதியில் சுமார் 70 ஆயிரம் சாரணர்கள் இணைந்திருக்கின்றமையுடன் விசேட தேவையுடைய சாரணர் குழுவும் அவர்களுள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, சர்வதேச சாரணர் இயக்கத்தின் ஆணையாளர் நதீகா குணசேகர, இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவி பிரதம ஆணையாளர் நிர்மலி வில்லியம் மற்றும் பல்வேறு வயது பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சாரணர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய புத்தரிசி விழாவுக்காக யாழில் அரிசி வழங்கும் நிகழ்வு!

தேசிய புத்தரிசி விழாவிற்கான அரிசியினை வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களில் இடம்பெறும் புத்தரிசி விழா கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கரவெட்டி கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாகச் செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 03 ஆம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஶ்ரீ மகா போதியில் இடம்பெற வுள்ளது. இந்நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் காத்திருக்கும் மக்களிடம் மன்னிப்புக் கோரிய இராஜாங்க அமைச்சர்!

எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் காத்திருந்து கஷ்டப்படும் மக்களிடம் தான் மன்னிப்புக் கோருகின்றேன் என இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. தற்போது மக்கள் அரசைத் தூற்றுகின்றனர்.

இதுவே உண்மையான விடயம் என்பதோடு அதனை மறைத்து எந்தப் பயனும் இல்லை.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சரிடம் சென்று எமக்கும் சகல விடயங்களும் சரியாக இடம்பெறுகின்றன எனவும் சிறப்பாக இடம்பெறுகின்றன எனவும் கூற முடியும். ஆனால் எத்தனை நாள்களுக்கு இவ்வாறு



'ஆம்' என்று கூறிக் கொண்டிருக்க முடியும். நுகர்வோர், விவசாயிகள், கடற்றொழிலாளர் மற்றும் அரச சேவையாளர்கள் உள்ளிட்ட சகலரும் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளனர்.

அழுத்தங்களை பிரயோகித்து மக்களை வழி நடத்த முடியாது. மக்களின் பிரச்சினைகளுக்கும் செவிசாய்த்து செயற்பட வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2022இல் வெளியிடப்பெற்றது.